வயது பதினைந்து

செல்லம் பதின்மூன்று வயதில் காதலிக்கத் தொடங்கினாள். இதை தன் அத்தை பெண் சம்பகத்திடம் சொன்னாள். சம்பகம் இன்னும் இரண்டு வயது பெரியவள். செல்லத்தின் குரு. உலக வாழ்க்கையைப் பற்றி மிகத் தீவிரமாக யோசித்து விட்டுத் தியாக வாழ்க்கையை மேற்கொள்ள வெண்டும் என்று சம்பகம் தீர்மானித் திருந்தாள். எதைத் தியாகம் செய்ய வேண்டும், எதற்காக என்பதை இன்னும் நிச்சயம் செய்திருக்கவில்லை. ஆனால், அடிக்கடி வெறித்துப் பார்த்து 'என்ன வாழ்க்கை' என்று சொல்வதை அவள் சில மாதங்களாக மேற்கொண்டிருந்தாள். சில சமயம் அழகான கன்யா ஸ்திரீயாக மாறி மாதா கோவிலில் ஜபம் செய்தவாறு, முகத்தில் தேஜஸுடன் தலையைத் திருப்பி உலகத்தினரைப் பார்ப்பது போல் நினைத்துக் கொள்ளவாள். கன்யாஸ்திரீயாகுபவர்கள் காதலில் தோல்வியுற்றவர்கள் என்று அவள் கேள்விப்பட்டிருந்தாள்.

கற்பனைக் காதல் சோகம் சிலவற்றை அவள் யோசித்துப் பார்த் திருந்தாள். ஒரு காதலன். பார்க்க அப்படி ஒரு கம்பீரம். ஆனால், அவனுக்கு இதுதான் வியாதி என்றில்லை. க்ஷயரோகத்திலிருந்து தொடங்கி புற்றுநோய் வரை எல்லா வியாதிகளும் அவனைப் பீடித்திருந்தன. சாவதைத் தவிர அவனுக்கு வேறு வழியே இல்லை. ஆனால், தன் வியாதி பற்றி அவனுக்குத் தெரியாது. அவளைப் பார்க்காமல் அவனால் இருக்க முடியாது. ஒரு நாள் மாலை ரொம்ப தூரம் நடந்து வந்து கதவைத் தட்டுகிறான். அவள் திறந்ததும் "சம்பா" என்று கூறியவாறு அவள் மேல் சாய்ந்து விடுகிறான். அவள் காதலன் பிணமாக அவள் கையில். என்ன வாழ்க்கை!

இன்னொரு காதலன். இவன் பெயர் சில சமயம் ஜார்ஜ். சில சமயம் சலீம். சமூகம் இவர்கள் காதலில் குறுக்கிடுகிறது. ஜார்ஜை எலிசபெத்தைக் கல்யாணம் செய்து கொள்ளும்படியும், சலீமை கதீஜாவை நிக்காஹ் செய்து கொள்ளும்படியும், சமுகம் வற்புறுத்துகிறது. ஜார்ஜ் – சலீமுக்கும், சம்பாவுக்கும் இடையே நடக்கும் கடைசி சந்திப்பு மிகவும் சோகமானது. சம்பாவின் இருதயம் தூள் தூளாகச்

சிதறி விடுகிறது. கண்களில் கண்ணீர் வற்றி விட்டது. புன்னகை செத்த இறுகிய முகம். "எங்கள் குடும்பத்தை மீறி" என்று ஜார்ஜ் – சலீம் இருவரும் கோழை வசனம் சொல்வார்கள். சம்பாவின் முகத்தில் ஓர் உயிரற்ற புன்னகை தோன்றும். தெருவில் இறங்கி நடக்கும் காதலனை ஜன்னல் வழியாக வெகு நேரம் பார்ப்பாள். ஒரு நீண்ட பெருமூச்சு அவள் நெஞ்சிலிருந்து கிளம்பும். வாழ்க்கை பொருளற்றுப் போய்விடும்.

இத்தனை சோகத்தையும் தாங்கிக்கொண்டு நடமாடிக் கொண்டிருந்தாள் சம்பகம். ஆனால், இந்தப் பாழும் உலகுக்கு அவள் சோகத்தை உணரமுடியவில்லை. காரணம், சோகத்தை அவள் நடைமுறை வாழ்க்கையுடன் இணைக்கவில்லை. அல்ஜீப்ரா பரிட்சையில் விடாமல் அவள் வகுப்பு கல்யாணியுடன் போட்டி போட்டு நூறு மார்க் வாங்கினாள். "நான் டீச்சரானால்", "நான் நர்சானால்", "நான் டாக்டரானால்" என்று மற்றவர்கள் கட்டுரை எழுதினால், "நான் விமானம் ஓட்டினால்", நான் சிற்பியானால்" என்று சோகம் துளிக்கூட வராத கட்டுரைகள் எழுதினாள். மேலும், பட்டுத் தாவணி வேண்டும் என்று சண்டை போட்டு வாங்கிக் கொண்டாள். தோசை சுட்டுப் போட்டால், நெய் – சர்க்கரையுடன் ஒன்று; மிளகாய்ப் பொடியுடன் ஒன்று; வெங்காயச் சட்னியுடன் ஒன்று; புளி இஞ்சியுடன் ஒன்று என்று சரியாகச் சாப்பிட்டாள். இதனாலெல்லாம் அவள் வாழ்க்கையைத் துறந்து விட்டது பற்றி யாருக்கும் தெரியவில்லை. சாப்பிட்ட இடத்தை துடைப்பது, தயிர் கடைவது, வெங்காயம் உரிப்பது, காப்பிக்கொட்டை அரைப்பது போன்ற அற்பமான வேலைகளில் அவளை ஈடுபடுத்தினார்கள். இதையும் தாங்கிக் கொண்டு சம்பகம் அப்பா மற்றும் அம்மாவுடைய கேள்விகளுக்கு உணர்ச்சியற்ற குரலில் பதில் சொன்னாள். அப்போது கூட அவர்கள் உணரவில்லை. அவர்கள் சூட்சுமக் குறைவு பற்றி அவள் வருந்தினாள். பின்னால் இவள் கூறப்போகும் விஷயம் அவர்களை எப்படிப் பாதிக்கப் போகிறது இப்படி அவர்கள் இருந்தால் என்று அலுத்துக் கொண்டாள்.

இப்படி இருக்கும் போதுதான் சம்பகத்திடம் செல்லம் தன் காதல் பற்றிச் சொன்னாள்.

சம்பகம் ஒரு சோகப் புன்னகையை உதிர்த்து, "என்ன வாழ்க்கை!" என்றாள்.

"யார் அவன்?" என்றாள் சம்பகம் சிறிது நேரத்துக்குப் பின்.

"வரதன்."

"எந்த வரதன்?"

"கலிவரதன். ராதா டீச்சரோட பையன்."

கலிவரதனுக்குப் பதினெட்டு வயது. கல்லூரியில் நுழைந்திருந்தான். சென்னையில் பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு வந்திருந்தான். அவன் அம்மாவிடம்தான் செல்லத்துக்கு ட்யூஷன். அவள் ட்யூஷனுக்கு வரும்போது அவனுக்கு அடிக்கடி தொண்டை கமறி இருமல் வந்து விடும். செல்லத்துக்கும் இருமும். ராதா டீச்சர், "இந்தக் கணக்கை இவளுக்குப் போட்டுத் தா வரது" என்று சொல்லிவிட்டு, உள்ளே தண்ணி எடுத்துவரப் போகும்போது இருமல் நின்று விடும். ரோஜாப்பூ பூவேலை செய்திருந்த அவள் கைக்குட்டை ஒன்றை அவன் மேஜை மேலிருந்து எடுத்து உதட்டில் வைத்து நெஞ்சில் ஒற்றிக் கொண்டான் ஒரு நாள்.

அவன் காதலின் தீவிரத்தைப் பார்த்து செல்லத்திற்குத் தொண்டையை அடைத்தது. கலிவரதனின் பருக்கள் அரும்பிய முகத்தினூடே அவன் காதலின் பாவத்தைப் புரிந்து கொள்வது சிரமமாக இருந்தாலும், இந்த மாதிரி செய்கைகள் மூலம் அவனைப் புரிந்துகொள்ள முடிந்தது. ஒரு தடவை அவன் ஓர் ஓவியம் வரைந்து தந்தான். ஒரு முகம். ஒரு பாதியில் கண்ணும், பொட்டில் பகுதியும், மூக்கின் பாதியும், வாயின் ஓரமும். மறுபாதி வெறுமை. "முழுசா ஏன் போடலை?" என்றாள் செல்லம். "அதெல்லாம் நவீன ஓவியம். குறியீடு எல்லாம் இருக்கும். உனக்கு இப்போ புரியாது" என்றான் அவன் கனிவுடன். அவள் அவன் கண்களுக்குள்ளே பார்த்தாள். எவ்வளவு கெட்டிக்காரன்! இன்னொரு தடவை கவிதை எழுதித் தந்தான். தமிழ்க் கவிதை. செல்லம், சம்பகம் இருவரும் பள்ளியில் கன்னடமும் இந்தியும் படித்தார்கள். தமிழ் தெரிந்திருந்தாலும், கவிதை என்பது ஒரு பிரத்யோக உலகில் சஞ்சரிக்கும் சிலர்தான் எழுத முடியும் என்று அவர்கள் நம்பினார்கள். கவிதை செல்லத்துக்குப் பிடித்திருந்தது. சம்பகம் கூட அது தேவலை என்றாள்.

உள்ளத்து ஆசைகளை
சொல்லாமல் மறைச்சாலும்
கண்ணாடி போல முகம்
தன்னாலே காட்டி விடும்

– கவிதையைச் சுற்றி கலிவரதன் படம் வரைந்திருந்தான். ஒரு பக்கம் அம்பு துளைத்த இதயம். இன்னொரு பக்கம் தூண் மாதிரி வளைவு நெளிவில்லாத ஒரு கால். அதில் ஒரு கொலுசு. கொலுசு மட்டும் இல்லாவிட்டால் அது யானைக்கால் வியாதிக்கான விளக்கப் படம் என்று யாரும் நினைத்திருக்கலாம். செல்லம் நினைக்கவில்லை.

சம்பகத்தை அந்தக் கால் கொஞ்சம் பயமுறுத்தியது. ஆனால், கவிதை அவளுக்குப் பிடித்தது. செல்லம் கலிவரதனுக்குப் பதில் போட ஆசைப்பட்டாள். சம்பகத்தின் உதவியை நாடினாள். சம்பாவின் தமிழ் மற்றும் உலக அனுபவம் பற்றி அவளுக்கு அசாத்திய நம்பிக்கை இருந்தது. பதில் கடிதம் தயாராகியது.

'கள்வரே,

உள்ளத்தைத் திருட விரும்பும் நீங்கள் கள்வர்தான்.

உங்கள் கவிதை மனத்தைத் தொட்டது. ஆயினும்,

நான் ஒரு தனி மலர்.

வண்டை வெறுக்கும் மலர்.

கன்யாஸ்திரீயாகி ஏசுவுக்கு அர்ப்பணமாகப் போகும் மலர்.'

"நான் எங்கே கன்யாஸ்திரீயாகப் போறேன். அது நீ இல்லையோ?" என்றாள் செல்லம்.

"யாராயிருந்தால் என்னடீ? இது வெறும் லெட்டர்தானே."

"சோகம் இருக்கணும். இல்லாட்டா காதல் இல்லை அது" என்று அவளை அடக்கினாள் சம்பகம்.

கலிவரதனின் பதிலில் சோகம் இருந்தது.

'தோழி,

நீ கன்யாஸ்திரீயாகி விட்டால் நான் வாழ்வதில் அர்த்தமில்லை. என் காதல் மேல் ஆணையாக நான் இந்த அர்த்தமற்ற வாழ்வை முடித்துக் கொள்வேன்.'

செல்லம் கவலைப்பட்டாள்.

"நான் சொல்லிடட்டுமா? அவன் செத்துட்டா?"

சம்பகம் அவளைச் சமாதானப்படுத்தினாள். இன்னொரு பதில் கடிதம் தயாரித்தாள்.

'நண்பரே,

கன்யாஸ்திரீயாகாவிட்டாலும் நான் ஒருதனி மலர்தான். என்னை மிகவும் விரும்பும் ஒருவருக்காக நான் என்னை அர்ப்பணித்துக் கொள்ள விரும்புகிறேன். அவர் நல்லவர்; வல்லவர். ஆனால், ஆண்மையற்றவர். ஒரு விபத்தில் இப்படி நேர்ந்துவிட்டது. இதை என் வீட்டவர் எதிர்த்தால் நான் கன்யாஸ்திரீயாவேன். என் வாழ்க்கை இப்படியாகிவிட்டது. கவிதையும் சித்திரமும் படைக்கும் உங்களுக்கும் ஒருத்தி அமைவாள்.'

"ஆண்மையற்றவர்னா என்னடீ?" என்றாள் செல்லம். சம்பகத்துக்கும் தெரியாது. அது ஒரு பெரிய இழப்பு என்பது மட்டும் தெரிந்திருக்கிறது. ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் அப்பா சினிமா போவார் தனியாக. அவருக்குக் குஷி பிறந்துவிட்டால் சம்பகமும் கூடப் போவாள். அப்பாவுடன் போனால் பால்கனி டிக்கெட். அம்மாவுடன் போனால் பன்னண்டணா டிக்கட்.

அப்பா அதிகம் ஆங்கிலப் படங்களைத்தான் பார்ப்பார். அபூர்வமாகத் தமிழ். அப்படிப் பார்த்ததுதான் 'சாரதா'. கதாநாயகன் எஸ்.எஸ். ராஜேந்திரன் விழுந்து விடுவான். கை, கால் எல்லாம் உடையாது. ஆனால் 'ஆண்மை' போய்விடும். விஜயகுமாரி ராத்திரியெல்லாம் தலையில் பச்சைத் தண்ணீர் ஊற்றிக் கொள்வாள். மீண்டும் திருமணம் செய்யப் போகும் போது விஜயகுமாரி கணவன் காலடியில் உயிரைவிட்டுவிடுவாள். சம்பகத்துக்குப் பிடித்திருந்தது. பலமுறை நமஸ்காரம் செய்தவாறே உயிரைவிடுவதுபோல் அபிநயித்துப் பார்த்தாள் குளியலறையில். ஒருவனுக்காகச் சாவது எவ்வளவு பெரிய தியாகம்! அதுவும் ஆண்மையற்றவனுக்காக! மேலும் வேளையற்ற வேளையில் பச்சைத் தண்ணிக் குளியலிலும் அவளக்கு மறுப்பு இருக்கவில்லை.

காதல் கடிதத்தின் போக்கு இவ்வாறு மாறிவிட்டது.

கலிவரதனின் பதில் உருக்கமாக இருந்தது.

'உன் இளமையைக் காட்டில் காயும் நிலாவாக நான் விடமாட்டேன். உன்னைப் பயன்படுத்த நினைக்கும் ஆண்மையற்ற அந்தக் கயவன் யார்? காதலிக்க அவனக்கு என்ன உரிமை? நீ செய்ய நினைப்பது உனக்கு ஓர் ஆயுள் தண்டனை. அன்பே, உன்னை நான் பூப்போலக் காப்பேன். இப்படிப் பாலைவனத்தில் நடக்காதே.'

செல்லத்துக்குத் தாளவில்லை. "போ இவளே. இது ரொம்ப சோகமா போகுது. அப்படி என்ன ஆயிடும் ஆண்மையற்றவன்னா?" என்று துளைத்தாள்.

பலத்த சர்ச்சைக்குப் பிறகு அவர்கள் காத்யாயனியை அணுகினர். காத்யாயனி சம்பகத்தின் வகுப்பில் இருந்தாள். ஒரு தமிழ் சினிமாவைக் கூடப் பார்க்காமல் விடாத ஓர் அருமையான அம்மா–அப்பாவின் பெண். அவள் படம் பார்த்துவிட்டு மறுநாள் சொல்லும் கதையிலேயே திருப்தி அடைந்தனர் அவள் தோழியர். "அவன் அவளைப் பார்ப்பான். அவ இப்படி உதட்டைச் சுழிச்சுக்குவா. அவன் ஒரு ரோஜாப்பூவை எறிவான். அவ இப்படி நெஞ்சக்கு மேல கைய வெச்சுப் பிடிப்பா அதை. அப்புறமா பாட்டு. அவன் அப்பிடியேப்பா, வந்து இங்க இடுப்புல தொடுவான். அவ அப்பிடியே சாய்வா அவன் மேல..." என்று அவர்கள் பார்க்காத குறையைத் தீர்ப்பாள்.

சம்பகா மற்றும் செல்லம் எழுப்பிய கேள்வியை எப்படி அணுகுவது என்று காத்யாயனி யோசித்தாள். காரணம், அவளுக்கும் பதில் தெரியவில்லை.

மிகவும் நல்ல சயமத்தில் அவள் சித்தப்பாவின் திருமணம் நிச்சயமாயிற்று. முதல் மாடியில் மூலை அறையில்தான் முதல் இரவு வழக்கமாக நடைபெறும். இதுவரை நடந்த கல்யாணங்களில் எல்லாம் அங்கேதான். அது ஒரு பாத்ரூம் இணைக்கப்பட்ட அறை.

சம்பா சொன்னது போல் பச்சைத் தண்ணியிலே குளிக்க அது தேவைப்படலாம் என்று நினைத்தாள். அந்த அறை மூலையில் ஒரு புத்தக அலமாரி. சித்தப்பா படிக்கும் அறையும் அதுதான். எல்லோரும் பட்சணம் செய்யும் மும்முரத்தில் இருக்கும்போது காத்யாயனி அந்த அறையை முற்றுகையிட்டாள். புத்தக அலமாரியிலிருந்து மூன்று புதிய புத்தகங்கள் கிடைத்தன. ஒன்றில் படங்கள் இருந்தன. படங்கள் போட்டதை அபேஸ் செய்து ஸ்கூலுக்குக் கொண்டு வந்தாள்.

செல்லம் ஜூனியராக இருந்தாலும் அவளையும் சேர்த்துக் கொண்டு பார்த்தனர். ஒரு படத்தை வெகுநேரம் பார்த்து மூவரும் 'ஐயையோ' என்றனர். இப்படியெல்லாம் ஒரு கஷ்டமா என்று தோன்றியது. காதல் விவகாரமே வேண்டாம் என்ற நிலையைச் செல்லம் எட்டிய போதுதான் அவர்களுக்குப் புரிந்தது – படத்தைத் தலைகீழாகப் பார்க்கின்றனர் என்று. கழுத்தைத் தடவிக் கொண்டனர். மூவருக்கும் கொஞ்சம் புரிந்துவிட்டது ஆண்மையற்றவன் யார். என்று அவன் ஒன்றும் அவ்வளவு மோசமான நபராகப் படவில்லை. ஆனால், ஏதோ ஒரு வகையில் குழந்தைப் பிறப்பும் இதில் சம்பந்தப் பட்டிருப்பது போல் தோன்றியது. இந்தச் சிக்கலைத் தீர்க்க மேலும் படிக்க வேண்டியிருந்தது.

பெங்களூர் மல்லேஸ்வரத்தில் அப்போதுதான் புதிய சர்குலேட்டிங் லைப்ரரி ஆரம்பமாயிருந்தது. பலத்த முயற்சிக்குப் பின், சுவர்வரை அடுக்கியிருந்த புத்தகங்களில் மூன்றாம் படியின் மூலையில் இருப்பவை இவர்கள் தேடிய புத்கங்கள் என்று காத்யாயனி கண்டுபிடித்தாள். அங்கிருந்த குட்டி பெஞ்சுகளில் அமர்ந்து மூவரும் மூன்று புத்தகங்களை வேக வேகமாகப் படித்தனர் மாலைகளில். எல்லா புத்தகங்களும் கேளிக்கைகள், லீலைகள், ஜல்சா போன்ற விநோத தலைப்பிட்டு இருந்தன. குறிப்பாக இவர்கள் தேடிய விஷயம் கிடைக்காவிட்டாலும் பெண்களும் ஆண்களும் இருபத்து நாலு மணி நேரமும் 'கேளிக்கை'களில் ஈடுபட்டார்கள் என்று தோன்றியது புத்தகங் களிலிருந்து. அவர்கள் படித்தவற்றிற்கும் அவர்கள் உடம்புக்கும் எந்தவிதத் தொடர்பும் இருப்பதாக அவர்கள் நினைக்கவில்லை. இவர்கள் பெற்றோர்கள் இவற்றில் சம்பந்தப்பட்டிருக்க முடியும் என்பதை ஏற்கச் செல்லம் மறுத்தாள். சம்பகத்துக்கு இது பற்றி உறுதியான முடிவுகள் இருக்கவில்லை. காரணம், போன வருடம் வரை மாதம் மூன்று நாட்கள் அம்மா ஒதுங்குவதன் காரணம், "சாமி வந்து காதில் 'மூணுநாள் ரெஸ்ட்' என்பார்" என்ற அம்மாவின் கூற்றை அவள் நம்பியிருந்தாள். அவள் வகுப்பு கோவிந்தம்மா இதை மறுத்துக் கூறியதை எல்லாம் அவள் ஏற்கவில்லை. அவளுக்கே ஏற்பட்ட போதுதான் சாமி அவளிடம் ஒன்றும் சொல்லவில்லை என்பது மட்டுமல்ல, காதுக்கும் இதற்கும் ஒரு சம்பந்தமுமில்லை என்று அவள் உணர்ந்து பலத்த ஏமாற்றத்துக்கு உள்ளாகியிருந்தாள். அதனால்

அவள் பெற்றோர் இதில் சிக்காதவர்கள் என்று சுலபமாக அவளால் நம்ப முடியவில்லை.

காத்யாயனி இதைத் தத்துவார்த்தமாகப் பார்த்தாள். "அப்படித்தான் இருக்கும்பா கல்யாணம்னா. ஒரு நாளைக்கு நூறு முத்தமாவது தருவாங்கப்பா" என்றாள் திரும்பி வரும்போது ஒரு நாள். சித்தப்பா சித்தியை மாடிப்படியின் கீழே இருட்டில் இறுக்கி முத்தமிட்டதை அவள் பார்த்திருந்தாள் முந்தின நாள். முத்தத்துக்காகச் செலவான நேரம், சித்தப்பா மற்றும் சித்தி தனியாக இருக்கக் கிடைக்கும் நேரம் இவற்றைக் கணக்கிட்டு, ஒரு முத்தத்துக்கு ஐந்து நிமிடம் என்றால் அவர்கள் ஒரு நாளில் சித்தப்பா ஆபீஸ் போன நேரம் போக, எட்டு மணி நேரம் சேர்ந்து இருந்ததால் சுமார் நூறு என்ற புள்ளி விவரத்தை அவள் எட்டியிருந்தாள்.

"நூறா? ஐயோ!" என்றாள் செல்லம்.

"அதைவிட ஜாஸ்திகூட இருக்கும்" என்றாள் காத்யாயனி. செல்லத்தின் நடை கொஞ்சம் தளர்ந்தது.

செல்லத்துக்காக சம்பகம் எழுதிய கடிதத்தில் சோகத்தின் எடை கூடியது. பூவிலிருந்து அவள் பறவையாகிவிட்டாள்.

'நான் ஒரு தனிப் பறவை. என் காதலரின் ஊனத்தை ஏந்திக் கொண்டு பறக்கும் பறவை. என் விதி இப்படியாகிவிட்டது.'

கலிவரதனின் பதிலில் சோக அருவியே கொட்டியது.

'கண்ணே,

நீ இல்லாமல் நான் வாழ்வது எங்ஙனம்? உன் இளமைப் பொசுங்கிப் போய்க் கொண்டிருக்கும்போது நான் எவ்வாறு அதைப் பொறுப்பேன்? அந்த ஆண்மையில்லாக் கயவனுக்கா இந்தப் பொக்கிஷம்? என் கரத்தை நீட்டுகிறேன். பற்றிக் கொள்.'

கடிதப் போக்குவரத்து இந்த நிலையில் இருந்தபோதுதான் வாசுதேவன் வந்து சேர்ந்தான். புதிய சமையற்காரன். சமையலை அவன் செய்த விதம், அவனுடைய மற்ற ஆர்ப்பாட்டங்கள் இவைகளால் அவன் இவர்களுக்கு நெருங்கியவன் ஆனான். 'இந்தச் சங்கடமான சமையலை விட்டுச் சங்கீதம் பாடப்போறேன்' என்று பாடினான். காய்கறியை வேகப் போட்டுவிட்டு, "நான் ரெண்டு நிமிஷம் அந்தப் பக்கம் போகணும். குழைந்து தொலைக்காதே" என்று அதனுடன் பேசினான். இட்லியை ஊற்றும் போது, "பூப்போல இருந்து மானத்திக் காப்பாத்திடு" என்றான். எல்லாவற்றையும் விட அவன் ஒரு கலைஞன். எம்.ஆர். ராதா ரசிகன். சனிக்கிழமைகளில் மதியம் இவர்களுக்கு உணவைப் படைத்து விட்டு, 'ரத்தக் கண்ணீர்' வசனம் அடித்தொண்டையில் பேசினான். முதுகைக் கூனி, கண்களை இடுக்கி, தலையைச் சாய்த்து ஒரு பக்கம் பார்த்தவாறே, "நிம்மதியா?

எனக்கா?...” என்று கட்டைக் குரலில் கேட்டான். தான் காதலில் தோல்வியுற்றவன் என்று அவன் சொல்லிக் கொண்டான். காதலைப் போன்ற அபத்தமான, உபயோகமற்ற விஷயம் வேறு எதுவும் இல்லை என்றான். இருந்தாலும் அம்மா–அப்பா இல்லாத மாலைகளில், “துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ” என்று அவன் பாடிக் காட்டியபோது, “திருக்குறளிலே ஒரு சொல் இயம்பிக் காட்ட மாட்டாயா?”என்று கேட்டபோது அவன் குரல் கமறியது. காதலைப் பற்றி அறிவுரை கேட்க அவன் ஒரு நல்ல நபராகப் பட்டான். கலிவரதனின் கவிதையை அவனிடம் காட்டினர். அவன் உதட்டைப் பிதுக்கினான். அது ஒரு தமிழ் சினிமாப் பாட்டின் பகுதி என்றும், அதை எழுதியவர் கலிவரதனுடன் எந்த வகையிலும் சம்பந்தப்படாத மருதகாசி என்றொருவர் என்றும் கூறினான்.

கலிவரதன் இவ்வளவு பொய்யானவன் என்று அவர்கள் நினைக்க வில்லை. அதுவும் காதல் கவிதை விஷயத்தில் இப்படி ஏய்க்கக் கூடியவன் என்பது பெருத்த ஏமாற்றத்தை அளித்தது. சித்திரத்தில் இருந்த அந்தப் பருத்த காலின் பூதாகாரம் இப்போது நூறு மடங்கு உறுத்தியது.

மறுவாரம் செல்லத்திடம் ஒரு கவிதைப் புத்தகத்தை நீட்டினான் கலிவரதன். சம்பகமும் கூட இருந்தாள் அன்று. அவர்கள் தெருமுனை பஸ் நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்தனர் இருவரும். கூட்டமில்லாத நேரம். செல்லத்துக்காக அவன் எழுதிய கவிதைகள் என்றான். செல்லம் அதைத் தூக்கி எறிந்தாள். கலிவரதன் நிலைகுலைந்து போனான். அதைக் குனிந்து எடுத்து மீண்டும் நீட்டினான். அட்டையில் ஒரு பெண்ணை வரைந்திருந்தான். பின்னலை முன்னால் விட்டுக் கொண்டு ஒரு கையை முகவாய் அடியில் வைத்து, ஒரு பக்கம் கோணலாகப் பார்த்தவாறு. காக்கை மாதிரி பட்டது சம்பகத்துக்கு. செல்லத்தைக் கையால் இடித்து சமிக்ஞை செய்தாள். செல்லம் புத்தகத்தைக் கிழித்துப் போட்டாள் கீழே. கலிவரதனின் முகம் வெளிறிவிட்டது. உதடு துடிக்க ஆரம்பித்தது. புத்தகத் துண்டுகளைக் குனிந்து பொறுக்கினான். “நான் செத்துடுவேன்” என்று விம்மியவாறு கூறிவிட்டுத் தொய்ந்த நடையில் போனான் திரும்பி.

செல்லமும், சம்பகமும் அவன் இறந்த செய்தி வரும் என்று கொஞ்சம் பயத்துடனும், ஆவலுடனும் எதிர்பார்த்தனர். அவன் எப்படிச் சாகலாம் என்பதை அவர்கள் சர்ச்சை செய்திருந்தனர். தூக்குப் போட்டுக் கொண்டா, விஷம் குடித்தா – எந்த விஷம் – அல்லது ரயில் முன் விழுந்தா போன்ற விவரங்களை அலசிப் பார்த்து அவன் தூக்குப் போட்டுக்கொண்டு சாவான் என்று தீர்மானித்திருந்தனர். ஆனால், இதில் கூட கலிவரதன் ஏமாற்றி விட்டான். அவன் சாகவில்லை... அது மட்டுமல்ல. துளியும் வெட்கம் இல்லாமல் முகமலர்ச்சியுடன் அவன் தெருவில் போனதை செல்லம் கண்டாள் ஒரு நாள். இது அவளை வெகுவாகப் பாதித்தது.

தூக்குப் போட்டுக் கொண்டு ஒருவன் சாகலாம் காதலுக்காக என்ற கற்பனை, சம்பகத்துக்குப் பிடித்திருந்தது. போகப்போக, கலிவரதனும் அவளுமே காதலித்ததாக அவள் எண்ணிக் கொண்டாள். அவனைப் பல கோணங்களில் பிணமாக நினைத்துப் பார்த்தாள். பிணமாக அவனை நினைத்துப் பார்க்கும்போது அவன் பாவம், நன்றாகவே இருந்தான். தனக்காக ஒருவன் தூக்குப் போட்டுக் கொண்டு சாவது எத்தனை பெரிய சோகம் என்று பட்டது. அவள் வாழ்க்கையைத் துறக்க இன்னொரு சோகம் அவள் தோளில் கனமாக ஏறிக் கொண்டது.

'இந்தியா டுடே', மே 21 – ஜூன் 5, 1990